**ஹொரண நகர சபை**

**களுத்துறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 05 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹொரண நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் காணி விற்பனையின் அடிப்படையிலான வரி வருமானம் ரூபா 250,025 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்பு முதலீட்டுப் பெறுமதி முதலீட்டுச் சான்றிதழ் பத்திரத்தின் பிரகாரம் ரூபா 26,861,105 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 25,751,244 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக நிலையான வைப்பு முதலீட்டுப் பெறுமதி ரூபா 1,109,861 தொகை குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 2,651,531 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,609,760 ஆக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 1,041,771 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய வாடகை வருமானம் ரூபா 5,400 தொகை அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் பிறிண்டர் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 106,000 தொகை மூலதன செலவின விடயங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 06 ஆவது நிகழ்ச்சித்திட்டத்தில் மீண்டெழும் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 1,537,598 தொகை மூலதன செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டதன்

காரணமாக நிதிக்கூற்றுக்களில் மூலதன செலவு ரூபா 1,537,598 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்குரிய நூலகப் புத்தகங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் நூலகப் புத்தகங்களின் நன்கொடைகளின் பெறுமதி என்பன ரூபா 1,613,022 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,588,169 ஆக மூலதனமாக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டில் நூலகப் புத்தகங்கள் மற்றும் மூலதனத்திற்கு வருமானப் பங்களிப்புக் கணக்கு என்பன ரூபா 24,853 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) தீயணைப்பு உபகரணங்களைப் பொருத்துவதற்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 199,000 தொகை மூலதனமாக்கப்படாமையின் காரணமாக இயந்திரமும் இயந்திர உபகரணங்களும் மற்றும் மூலதனத்திற்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு என்பன ரூபா 199,000 வீதம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டிற்குரிய செலவினக் கடன் கொடுத்தோர் பெறுமதி ரூபா 167,638 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக கடன்கொடுத்தோர் பெறுமதி மற்றும் மீளாய்வாண்டின் செலவினம் என்பன ரூபா 167,638 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) மேலதிகமாக அறவிடப்பட்ட ரூபா 4,500 தொகையான ஊழியர் கடன் செலுத்த வேண்டிய மீதியாக கணக்குகளில் காண்பிக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் ஊழியர் கடன் மீதி ரூபா 4,500 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) முன்னைய ஆண்டிற்குரியதாக மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 7,330,395 தொகையான முத்திரைக்கட்டண வருமானம் திரண்ட நிதியக் கணக்கில் செலவு வைக்கப்படாமல் ஆண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் கடன் கொடுத்தோர் கணக்கில் வரவு வைக்கப்பட வெண்டிய பெறுமதி சேர் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் முத்திரை வரி என்பன முறையே ரூபா 96,790, ரூபா 39,216 மற்றும் ரூபா 2,300 தொகைகள் உரிய வரிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டிருந்தது. மேலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய வரிக் கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டிய பெறுமதி சேர் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் முத்திரை வரிகள் முறையே ரூபா 96,703, ரூபா 39,216 மற்றும் ரூபா 5,315 தொகைகள் கடன் கொடுத்தோர் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. பல வருட காலமாக பிழையான முறையில் கணக்கு வைக்கப்பட்டமையினால் கடன் கொடுத்தோர் கணக்கிலும் உரிய வரிக் கணக்குகளிலும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி சரியானதாக இருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

(அ) நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 68,136,906 தொகையான 11 கணக்கு விடயங்களுக்குரிய மீதியையும் அவற்றுக்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதியையும் ஒப்பீடு செய்த போது ரூபா 18,836,960 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட மொத்த வைப்புக்களுக்குரிய பகுப்பாய்வில் மார்ச் மற்றும் ஒக்டோபர் மாதங்களின் வைப்புக்களின் பெறுவனவு முறையே ரூபா 821,889 தொகை மற்றும் ரூபா 303,627 தொகையென பதியப்பட்டிருந்த போதிலும், பொழிப்பு வருமான பதிவேட்டின் பிரகாரம் அப்பெறுமதி முறையே ரூபா 816,889 மற்றும் ரூபா 304,627 ஆக இருந்தது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**பெறவேண்டிய கணக்குகள்**

நவீன சந்தைக் கட்டிடத்தில் உள்ள காணிகளில் இருந்து அறவிடப்படாத மீதியாக ரூபா 426,979 தொகை மற்றும் மோட்டார் வாகனம் நிறுத்தி வைத்தல் கட்டணம் ரூபா 69,134 தொகையான நிலுவை மீதியொன்று கணக்குகளில் தொடர்ச்சியாக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

**தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 111,522,188 கூட்டுத்தொகையான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த / ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) நகர சபைகள்கட்டளைச் சட்டத்தின் (255 ஆவது அத்தியாயம்) 193 ஆம் பிரிவு | - | வாகனங்களை நிறுத்தி வைக்கும் இடங்களுக்கான உப விதியொன்று வர்த்தமானியில் பிரசுரித்து கட்டணத்தை முறையாக அறவிடுவதற்கு வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 371(இ) | 3,298,470 | எந்தவொரு பணிக்காகவும் வழங்கப்பட்ட முற்பணத் தொகை உரிய பணி நிறைவு பெற்றதும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்து கொண்டு வரப்படுகின்ற முற்பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571(1)(2) | 1,806,714 | ஒவ்வொரு அரை ஆண்டின் இறுதியின் போதும் காலாவதியான சகல வைப்புக்கள் தொடர்பாக பட்டியல் ஒன்று தயாரித்து அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 756, 757 மற்றும் நிதிப்பிரமாணம் 1647(அ) | - | வாகனத்தின் உபகரணங்கள் தொடர்பான முழுமையான மெய்மையாய்வும், உத்தியோகத்தரிடமிருந்து இன்னும் ஒரு உத்தியோகத்தருக்கு வாகனத்தை கையளிக்கின்ற சந்தர்ப்பத்தில் வாகனம் மெய்மையாய்வு செய்தல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 2016/30 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | - | நிறுவனத்திற்குச் சொந்தமான சகல வாகனங்களினதும் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 2016 நவம்பர் 03 ஆந் திகதிய LGD/13/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | சபைக்குச் சொந்தமான ஆதனங்கள் ஆரம்ப வாடகையாளரினால் உப வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அந்த உப வாடகையாளரை வாடகையாளராக நியமித்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 27,311,671 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 21,329,552 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

719675 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் நடைமுறைக் கணக்கில் 2009 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்படுகின்ற ரூபா 99,885 தொகையான மீதியை ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்துவதற்காக 2018 மே 17 ஆந் திகதி வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2017<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 15,750,000 | 15,840,487 | 18,957,810 | 3,937,510 | 15,750,000 | 15,424,638 | 16,892,762 | 6,272,965 |
| வாடகை | 8,815,072 | 8,910,082 | 8,499,647 | 2,824,764 | 5,524,440 | 5,809,009 | 6,517,284 | 2,153,324 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,200,000 | 2,014,260 | 2,013,260 | 30,500 | 2,200,000 | 2,347,580 | 2,404,220 | 29,500 |

### 2.3.2 வீதவரியும் வரியும்

**(அ) ஆதன வரி**

(i) மீளாய்வாண்டில் ஆரம்பத்தில் ரூபா 5,218,716 தொகையான ஆதனவரி நிலுவையாகக் காணப்பட்டதுடன் ஆண்டின் போது நிலுவையில் ரூபா 3,711,381 தொகை அதாவது 71 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் ஆதனவரி சிட்டையிடல் வருமானம் ரூபா 14,788,315 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 313,081 தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது. ஆண்டின் போது பெறுவனவுகள் ரூபா 13,350,949 தொகை அதாவது 92.1 சதவீதம் ஆகும்.

(iii) மீளாய்வாண்டின் ஆரம்ப ஆதனவரி நிலுவை மீதியில் ஆண்டின் இறுதியில் அறவிட வேண்டிய நிலுவை ஆதனவரி மீதி ரூபா 1,307,353 ஆக இருந்ததுடன் அதில் 03 வருடங்களை விஞ்சிய ரூபா 296,501 தொகையும், 05 வருடங்களை விஞ்சிய நிலுவை ரூபா 221,984 மற்றும் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட நிலுவை ரூபா 193,880 ஆகும். நீண்ட காலமாக காணப்படுகின்ற ஆதனவரி தொடர்பாக அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) களியாட்ட வரி**

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை களியாட்ட வரி ரூபா 1,068,598 ஆக இருந்ததுடன், வருடாந்த சிட்டையிடல் ரூபா 1,052,172 ஆகும். நடப்பாண்டின் பெறுவனவுகள் ரூபா 1,056,123 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ரூபா 1,064,647 ஆகும்.

### 2.3.3 வாடகை

**கடை வாடகை**

(i) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 2,150,174 தொகையான கடை வாடகை நிலுவையொன்று காணப்பட்டதுடன், ஆண்டின் போது அதில் ரூபா 1,485,953 தொகை அதாவது 69 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டில் கடை வாடகை சிட்டையிடல் ரூபா 8,905,582 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 6,870,673 தொகை ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்தமையால் மேலும் அறவிட வேண்டியுள்ள மீதி ரூபா 2,034,909 ஆகும்.

(iii) உடன்படிக்கைக்காலம் முடிவடைந்த 07 மீன் விற்பனைக் கடைகளுக்காக உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கோ அல்லது வேறுதரப்பினருக்கு வழங்குவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

#### (அ) கைத்தொழில் வரி

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 14,500 தொகையான கைத்தொழில் வரி நிலுவையொன்று காணப்பட்டதுடன் ஆண்டின் போது அதில் ரூபா 2,000 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. மேலும் அறவிடுவதற்கு இருந்த நிலுவை வரி மீதியான ரூபா 12,500 இல் ரூபா 7,500 இற்காக வழக்குத் தொடரப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடுவதற்கிருந்த முழுமையான கைத்தொழில் வரித்தொகை ரூபா 12,500 ஆகும்.

#### (ஆ) வியாபார வரி

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை வியாபார வரி வருமானம் ரூபா 15,000 இருந்ததுடன் ஆண்டிற்குரிய சிட்டையிடல் ரூபா 1,535,760 ஆகும். ஆண்டின் பெறுவனவுகள் ரூபா 1,532,760 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வருமானம் ரூபா 18,000 ஆகும்.

### 2.3.5 ஏனைய வருமானம்

#### (அ) மோட்டார் வாகன நிறுத்திவைத்தல் கட்டணம்

சகல அதிகாரப் பிரதேசத்தில் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைக்கும் இடங்களில் நிறுத்தி வைக்கப்படுகின்ற முச்சக்கர வண்டிகளிலிருந்து கட்டணத்தை அறவிடுவதற்காக 2017 சனவரி 01 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் உபவிதியொன்று விதிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது கட்டண அறவிடல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) அறிவித்தல் பதாதை வருமானம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2016 திசெம்பர் 23 ஆந் திகதிய 1999 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட முறையில் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொருத்தப்பட்டுள்ள அறிவித்தல் பதாதை / விளம்பர அறிவித்தல்களிலிருந்து கட்டணம் அறவிடுவதற்காக சபையினால் 2017 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மெய்மையாய்வின் பிரகாரம் 73 அறிவித்தல் பதாதைகளிலிருந்து ரூபா 657,375 தொகை அறவிட வேண்டியிருந்த போதிலும், அதில் எந்தவொரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், 2016 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மெய்மையாய்வின் பிரகாரம் 26 நிரந்தர அறிவித்தல் பதாதைகளிலிருந்து ரூபா 87,700 வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) மோட்டார் வாகன வாடகை**

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 54,887 தொகையான மோட்டார் வாகன வாடகை நிலுவையை அறவிடுவதற்கு 2016 ஆம் ஆண்டின் போது வழக்கு தொடரப்பட்ட போதும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வாடகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

**2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

**நீதிமன்றத் தண்டப்பணம்**

1980 இன் 26 ஆம் இலக்க உணவு மற்றும் ஔடத அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் நகர சபை எல்லையில் உணவு விற்பனை செய்த நிலையங்களுக்கு எதிராக 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது தொடரப்பட்ட வழக்குகளுக்குரியதாகக் கிடைக்க வேண்டிய ரூபா 148,500 தொகையை சபைக்குப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

நகரசபைக் கட்டளைச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உபவிதி**

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவின் கீழ் 15 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதியொன்று தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 04 விடயங்களுக்காக மாத்திரம் உபவிதி விதிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

(i) சபையினால் 2017 ஆம் ஆண்டிற்காக அமுல்படுத்தப்படுகின்ற வேலைகள் தொடர்பான விபரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2017 ஆம் ஆண்டின் மூலதன செலவினத்தின் கீழ் அமுல்படுத்துவதற்காக சபையின் 25 வேலைகளுக்காக ரூபா 26,580,000 தொகையான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 21,107,581 தொகையான 20 வேலைகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தன.

**(இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

சபை அதிகாரப்பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற உக்காத கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக முறையான வேலைத்திட்டமொன்று இல்லாமை மற்றும் அந்த பணிகள் வெளித்தரப்பினர் ஊடாக மேற்கொள்ளப்பட்டமையால் 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 3,662,875 தொகையான கணிசமான செலவினமொன்றைச் செய்வதற்கு சபைக்கு

ஏற்பட்டிருந்தது. இந்தக் கிரயங்களை மேவுகை செய்வதற்காக கழிவுப்பொருள் வரி விதித்தலை உள்ளடக்கி கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக உப விதியொன்று விதிக்கப்பட்டிருந்த போதிலும், கழிவுப்பொருள் வரி விதிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

---

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 யூன் 11 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

---

(அ) இலங்கை நிர்வாக சேவையில் உத்தியோகத்தர் ஒருவர் இருக்க வேண்டிய செயலாளர் பதவியின் வேலைகளை மேவுகை செய்வதற்கு முகாமைத்துவ உதவியாளர் சேவையின் விசேட தரத்தின் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஆ) மூன்றாம் நிலையில் 04 உம், இரண்டாம் நிலையில் 03 உம் மற்றும் ஆரம்ப நிலையில் 09 உம் ஆக 17 ஊழியர் வெற்றிடங்கள் காணப்பட்டன.

**3.3 முகாமைத்து செயற்றிறனின்மைகள்**

---

**தீயணைப்புப்பிரிவு**

---

(i) நகர சபை அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே தீயணைப்பு சேவைகளை வழங்குதல், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களுக்காக தீ நிவாரண சான்றிதழ் வழங்குதல், கட்டிட திட்டம் மற்றும் தீயணைப்பு பாதுகாப்பு முறைமை உறுதிப்படுத்தல் மற்றும் நோயாளர் காவும் வண்டிச் சேவைகளை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளுக்காக உபவிதியொன்றை அங்கீகரித்து கட்டணம் அறவிடும் திட்ட முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) சபைக்கு வெளியே தொழிற்சாலைகளுக்காக சேத மேவுகை சான்றிதழ் வழங்குவதற்காக உப விதியொன்று இல்லாமையின் காரணமாக தேவையின் அடிப்படையில் வருகைதருகின்ற நிறுவனங்களுக்காக சபை தீர்மானத்தின் அடிப்படையில் கட்டணம் அறவிட்டு தீ மேவுகை சான்றிதழ் வழங்குதல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது.

(iii) தீயணைப்பு பிரிவிற்குச் சொந்தமான வாகனமொன்று 1994 ஆம் ஆண்டு முதல் பதிவு செய்யப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. ஹீனோ வகைக்குரிய ஜப்பான் வாகனமொன்றான இந்த வாகனம் தொடர்பான எந்த ஆவணங்களும் சபையிடம் காணப்படவில்லை.

(iv) தீயணைப்பு பிரிவிற்குச் சொந்தமாகக் காணப்பட்ட கெப் வண்டியொன்று 2017 ஆகஸ்ட் மாதம் முதல் நகர சபை தலைமை அலுவலகத்தில் ஓட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்காமையால் தீயணைப்பு பிரிவினர் செயற்பாடுகளை சிறப்பானதாக மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

(அ) சிறுவர் விளையாட்டரங்கின் ஒரு பகுதியில் வெளித்தரப்பினரால் அனுமதியற்ற விற்பனைக் கடையொன்று நடாத்திச் செல்லப்பட்டதுடன் அதனை அகற்றுவதற்காக சபை தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(ஆ) வேவல முன்பள்ளிப் பாடசாலை அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான காணியில் 10 பேர்ச் வெளித்தரப்பினர் ஒருவரால் அனுமதியற்ற முறையில் கைப்பற்றப்பட்டிருந்ததுடன் அந்த காணிப் பகுதியை மீளப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1994 ஆம் ஆண்டின் போது சொறணவத்த ஏலமிடப்பட்ட காணியிலிருந்து பொது வசதிகளுக்காக சபைக்கு ஒதுக்கப்பட்ட 02 றூட், 06 பேர்ச் காணிப்பகுதி அடுத்தாலுள்ள காணி உரிமையாளரால் அனுமதியற்ற முறையில் பிடித்து வைக்கப்பட்டிருந்ததுடன் அந்தப் பகுதியை மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்குரிய 1 ஏக்கர் 02 றூட் 13 பேர்ச் அளவான பாரிய ஹல்கல்கொடெல்ல காணியில் அனுமதியற்ற நபர்களினால் வீடுகள் அமைத்து குடியிருந்து வருகின்றனர்.

#### 3.4.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

நகர சபை பயன்படுத்துகின்ற ஹொரண நூலகசாலைக் கட்டிடமும் காணியும், ஹொரண பழைய நகரசபைக் கட்டிடமும் காணியும், பொதுமக்கள் விளையாட்டரங்கு, சிறுவர் விளையாட்டரங்கு, சிறுவர் விளையாட்டரங்கிற்கு அருகிலுள்ள முன்பள்ளி பாடசாலை மற்றும் தீயணைப்புபிரிவு அமைந்துள்ள காணி என்பவற்றுக்கான உரித்துறுதி காணப்படவில்லை.

#### 3.4.3 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

(அ) 2016 யூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட உடற்பயிற்சி நிலையத்திலிருந்து பயன்பெறுகின்ற நபர்களினால் எண்ணிக்கையில் குறைவொன்று காணப்பட்டமையால், அதில் மக்களுக்கு கிடைக்கின்ற நலன்கள் குறைவடைந்திருந்தது.

(ஆ) 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 5,200,445 தொகை செலவினத்தில் நிர்மாணிக்கப்பட்ட மலசலகூட முறைமை மற்றும் இரண்டு குளியலறைகளில் மலசலகூட முறைமை மாத்திரம் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பயன்படுத்துகின்ற போதும், குளியலறை முறைமை எந்தப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

### 3.5 இருப்புப் பற்றாக்குறை

20 எரிவாயு சிலிண்டர்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 104,950 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதும், களஞ்சியத்திற்கு எரிவாயு சிலிண்டர்களைப் பெற்றுக்கொள்ளும் போது 02 சிலிண்டர்களில் பற்றாக்குறை காணப்பட்டதுடன் அதன் பெறுமதி ரூபா 10,495 ஆகும்.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் செலவினத்திற்குமிடையே கவனத்தில் கொள்ளக்கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) கணக்குகளிலிருந்து கைவிடல், குறைத்தும் அதிகரித்தும் பதியப்பட்டமை. |
| | (ii) பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாமை |
| (ஆ) வருமான நிர்வாகம் | (i) நிலுவை வரி அறவிடல் போதியளவான பிரகாரம் இடம்பெறாமை. |
| | (ii) வரி மதிப்பீடு குறித்த காலத்தில் இடம்பெறாமை |
| (இ) பாதீடு | (i) பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே கணிசமான முரண்கள் காணப்பட்டமை |
| | (ii) வருமான மதிப்பீடு பொருத்தமானதாக இல்லாமை |
| (ஈ) இருப்புக்கட்டுப்பாடு | (i) பெறுவனவுகள் மற்றும் விநியோகித்தல் தொடர்பாக மேற்பார்வை இடம்பெறாமை. |
| (உ) கழிவுப்பொருள் முகாமைத்துவம் | (i) முறையான வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்படாமை |
| (ஊ) நிலையான சொத்துக்கள் | (i) பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாமை |
| | (ii) சொத்துக்களின் பாதுகாப்பிற்காக போதியளவான படிமுறைகள் எடுக்கப்படாமை |